பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 14 சனிக்கிழமை 28.06.2025 கதிர் 231

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழ் மக்கள் விடயத்தில் இதற்கு முன்னர் இருந்த ஆளும்தரப்புக்களில் இருந்து தேசிய மக்கள் சக்தி எந்த விதத்திலும் மாறுபட்டதல்ல, அதுவும் பௌத்த சிங்கள ☞2

# முன்னாள் எம்.பி. ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை வழக்கு மீண்டும் கிளறப்படும்

## சாணக்கியன் எம்.பி. அறிவிப்பு

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பான வழக்கை மீண்டும் தாக்கல் செய்யவுள்ளோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் புதல்வர் ஜோசப் பரராஜசிங்கம் டேவிட் 20 வருடங்களுக்குப் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்கு வருகை தந்த நிலையில் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் சிவம் பாக்கியநாதன், பிரதி மேயர் டினேஸ் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

புதூர்ப்பகுதியில் உள்ள மயானத்தில் உள்ள ☞2

# ஜெய்கா, ஆசிய, உலக வங்கிகள் மீது எரிசக்தி அமைச்சர் கடும் பாய்ச்சல்

மின்சாரச் சட்டத் திருத்தம் குறித்த ஜெய்கா (JICA), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் உலக வங்கியின் கூட்டுக் கடிதத்தை எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி கடுமையாகக் கண்டித்து, அவர்களின் பொது அணுகுமுறை ராஜதந்திரமற்றது என்றும், பிரச்சினையை ☞6

# வோல்கர் தன் விருப்புக்கு ஆட்டிவைக்க இலங்கை ஐ.நாவின் கைப்பாவையல்ல

## ஐக்கிய மக்கள் சக்தி காட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க்கின் தேவைக்கு ஏற்ப ஆட்டி வைப்பதற்கு, இலங்கை ஐ.நாவின் கைப்பாவை அல்ல. உங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த ஆளும்தரப்பைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சித்தால் அதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று ☞6

# செம்மணியில் மேலும் இரு மனித எலும்புக்கூடுகள்

## இதுவரையில் மொத்தம் 24



செம்மணி மனித புதைகுழியில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை மேலும் இரண்டு மனித எலும்புக் கூட்டுகளும் மனித எலும்பு எச்சங்கள் சிலவும் நேற்று அடையாளம் காணப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப்பணிகள் வியாழக்கிழமை தொடங்கின. அன்றைய ☞2

# ரணில் மறுப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செப்டம்பர் 8, 2023 அன்று ஐக்கிய இராச்சியத்தில் உள்ள வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்திற்கு அரச பணத்தை வீணடித்துப் பயணம் செய்தது தொடர்பான ஊடக அறிக்கைகளை மறுத்து, அவை தவறானவை என்று அவரது அலுவலகம் ஒரு அறிக்கையை நேற்று வெளியிட்டது.

தொடர்புடைய அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ரணில் விக்கிரமசிங்க மறுத்து, விரைவில் ஒரு முறையான அறிக்கை வெளியிடப்படும் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக ☞2

# பேருந்தில் பெண்ணின் கால்களை படம் பிடித்தவருக்கு 2 வருட சிறை

## 20 வருடங்களுக்கு ஒத்திவைத்து வழங்கியது நீதிமன்றம்

பொரளை பகுதியில் தனியார் பேருந்தில் பயணித்த இளம் பெண்ணின் கால்களை மொபைல் போன் மூலம் படம் பிடித்த குற்றத்தை ஒப்புக்கொண்ட இளைஞருக்கு 20 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பை வெளியிட்ட கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனவெல, குற்றவாளிக்கு 1,500 ரூபாய் அபராதம் விதித்தார். பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடாக 50,000 ☞6

# இலங்கையின் இறையாண்மையைக் காட்டிக்கொடுத்த இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோர் சட்டத்தின் முன் நிற்கின்ற காலம் வரும்

## தயான் ஜயதிலக்க எச்சரிக்கை

இலங்கையின் இறையாண்மையைக்காட்டிக்கொடுக்கும்வகையில் இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் எதிர்காலத்தில் சட்டத்துக்குமுன்இருக்கவேண்டிவரும் என கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஆட்சிசெய்த எந்த ஆளும்தரப்பும் நாடாளுமன்றத்துக்கோ மக்களுக்கோ ☞2

# மீன்வளக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் கைது

## உடனடியாக பிணையில் விடுவிப்பு

இலங்கை மீன்வளக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே, தனது பதவிக் காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தால் (லஞ்சஊழல் ஆணைக்குழு யநுஎ) கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்போதைய மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கீழ் அந்தப் பதவியை வகித்த லியனகே, அரசுக்குச் சொந்தமான நிறுவனத்தின் செயல்பாடுகளுடன் தொடர்புடைய நிதி முறைகேடு வழக்கு தொடர்பாகவே கைது செய்யப்பட்டார்.

முன்னாள் அமைச்சர் சேனாரத்னவுக்கு எதிராகத் தொடரப்பட்ட பல நீதிமன்ற வழக்குகளில் அவர் முக்கிய சாட்சியாகவும் உள்ளார். உபாலி லியனகே பின்னர் நீதிமன்றத்தால் பிணை பெற்றார்.

# வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த யாழ்ப்பாணத்தில் இரு வாரத் திட்டம்

## ஜூலை நடுப்பகுதியில் தொடங்கும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை ஜூலை 14 முதல் தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்குப் பரந்தளவில் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்தார்.

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர், தென்னை பயிர்ச் செய்கை சபையின் பொதுமுகாமையாளர் விஜயசிங்க, தென்னை பயிர்ச் செய்கை ☞2

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தலைவர் மீது 3 குற்றச்சாட்டுக்கள்

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்க மீது லஞ்ச ஒழிப்பு ஆணையம் மூன்று ஊழல் குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளது. அவர் இந்த வாரத் தொடக்கத்தில் கைது செய்யப்பட்டு ஜூலை 1 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு தேசிய விமான நிறுவனத்தில் அவர் பணியாற்றிய காலத்தில் அரசிற்கு நிதி இழப்பு ஏற்படுத்திய சம்பவங்களுடன் தொடர்புடையதாக அவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன:

1. ஜனவரி 22, 2014 அன்று, கோலாலம்பூரிலிருந்து கட்டுநாயக்காவிற்கு இயக்க திட்டமிடப்பட்டிருந்த ஷீலி319 விமானம் திருப்பிவிடப்பட்டது. இதனால் அரசுக்கு 4,512 ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

பேரினவாத முறைமைக்குள் கனதியாகச் சிக்கிக்கொண்டுள்ள ஒரு தரப்புத்தான் என்பதை இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டுள்ளேன். குறிப்பாக என்பிபி மாற்றங்களைக் கொண்டு வந்துவிடும் என்று நம்புபவர்களுக்காகவே அதனை மீண்டும் மீண்டும் குத்திக்காட்டவேண்டிய தேவை இருந்தது. இப்போது மீண்டும் அதே வேலையைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

வடக்கில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் ஆளும்தரப்பின் வர்த்தமானி மீளப் பெறப்படும் என்று ஆளும்தரப்பு உறுதியளித்திருந்தது. இது தொடர்பில் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின்போதுகூட அது தொடர்பில் பிரதமர் ஹரினி சாதகமாகத்தான் பேசினார் என்று சொல்லப்பட்டது. ஆனால், கடைசி வரையில் அந்த வாக்குறுதியை ஆளும்தரப்பு நிறைவேற்றவேயில்லை.

6 ஆயிரம் ஏக்கர் காணிகளையும் அரசுடமையாக்கும் அந்த வர்த்தமானி மார்ச் 28 வெளியிடப்பட்டது. மூன்று மாத காலத்திற்குள் காணி உரிமையாளர்கள் தமது உரித்துக்கு உரிமை கோரி அதனை நிரூபிக்காவிட்டால் அந்தக் காணிகள் எல்லாம் ஜூலை 28 முதல் அரசுடமையாக்கப்படும் என்பதே வர்த்தமானி அறிவித்தல். ஒரு மாதம் கழித்து இந்த வர்த்தமானி பற்றிய செய்தி வெளியானபோது அதற்கு மிகப் பெரும் எதிர்வினையை தமிழ் அரசுக் கட்சி வெளிப்படுத்தியது.

அக்கட்சியின் பொதுச்செயலாளரும் அரசுத் தலைவர் சட்டத்தரணியுமான சுமந்திரன் ஆளும்தரப்பு இந்த வர்த்தமானியை உடனடியாகத் திரும்பப் பெறவில்லை என்றால் ஆளும்தரப்புக்கு எதிராக அறவழியில் சட்டமறுப்புப் போராட்டங்கள் நடத்தப்படும், அரசுத் தலைவர் வடக்குக்குள் நுழைய அனுமதிக்கமாட்டோம் என்றெல்லாம் ஆவேச அறிவிப்புக்களை வெளியிட்டார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் நேரம் என்பதால் அது இன்னும் தீவிரமானதாக இருந்தது. இந்தப் போராட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி முந்திக்கொண்டாலும் அதன் பின்னால் மறுக்க முடியாது இழுபடவேண்டிய நிலையில் ஏனைய கட்சிகளும் இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தன.

அது மட்டுமன்றி, இந்த வர்த்தமானி அறிவித்தலால் பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாகவே சந்தித்து விவரங்களைச் சேகரித்து அவர்களுக்கு வேண்டிய சட்ட உதவிகளை இலவசமாக மேற்கொள்வதற்கும் சுமந்திரன் நடவடிக்கை எடுத்திருந்தார். தேர்தல் நேரத்தில் இந்தப் பிரச்சினை பற்றியெரிவதை விரும்பாத ஆளும்தரப்பு, முதலில் வர்த்தமானி அறிவித்தலின்படி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாது என்று அறிவித்தது. ஆனால், அப்படிச் செய்வதற்குச் சட்டத்தில் இடமில்லை என்பதைச் சுட்டிக்காட்டி மீண்டும் தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பைத் தீவிரப்படுத்தியபோது, அந்தக் கட்சி வர்த்தமானியை மீளப்பெறுவதற்கு வழங்கியிருந்த ஜூன் 28 காலக்கெடுவிற்கு ஒரு நாள் முன்பாக, வர்த்தமானி அறிவித்தல் மீளப்படும் என்ற அறிவித்தலை ஆளும்தரப்பு வெளியிட்டது.

இதுபோன்ற விடயங்களில் ஆளும்தரப்பும் அரசின் உயர் தலைவர்களும் வழங்கும் வாக்குறுதிகள் சிங்கள பௌத்த பேரினவாதப் பொறிமுறையின் நடுவே நிறைவேற்றப்படுவது துர்பலம் என்பதை ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் நன்கு அறிந்து, தெரிந்து கொண்டிருந்த காரணத்தாலோ என்னவோ, சுமந்திரன் இந்த வர்த்தமானி அறிவித்தலை நீக்கக் கோரி பொது நல வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அந்த வழக்கு கடந்த ஒரு மாத காலத்திற்குள் மூன்று தடவைகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஆனால், வர்த்தமானி அறிவித்தலை திரும்பப் பெறுவோம் என்ற உறுதிமொழியை ஆளும்தரப்பினர் நீதிமன்றத்திற்கு உறுதிபட வழங்கவில்லை. இதனை அடுத்தே நேற்று உயர் நீதிமன்றம் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மீது இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை திரும்பப் பெறுவதாக வெளிப்படையாக அறிவித்த பின்னரும்கூட, அதனை நீதிமன்றத்தில் உறுதிமொழியாக வழங்குவதற்கு ஆளும்தரப்பில் காட்டப்பட்ட தயக்கத்திற்கு அது இயங்கும் சிங்கள பௌத்த பொறிமுறையின் அடித்தளமன்றி வேறு எந்தக் காரணங்களும் இல்லை. அதாவது நாடு முழுவதும் ஒரே சட்டம்தான், தமிழர்களுக்கு மட்டும் தனிச் சட்டமா என்பது போன்று ஆளும்தரப்பின் அரசியல் முடிவுகளை எதிர்க்கும் சிங்கள பௌத்த பேரினவாத முறைமை (சிஸ்டம்) அரசியல் தலைவர்களைவிட இங்கு மேலானது, அதுவே அரசுகளை இயக்குகின்றது என்பதையே இந்தச் சம்பவம் உணர்த்தி நிற்கின்றது.

நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோதுகூட ஆளும்தரப்பின் சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள், வர்த்தமானி அறிவித்தலைத் திரும்பப் பெறுவது என்று அமைச்சரவை முடிவு செய்திருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர். எப்போது திரும்பப் பெறப்படும் என்று நீதிமன்றம் வினவியபோது இன்று (அதாவது நேற்று வெள்ளிக்கிழமை) இரவு அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படலாம் என்று தெரிவித்தனர். அதனை அறுதியாகக் கூறமுடியுமா என்று நீதியரசர்கள் கேட்டபோது, அப்படித்தான் தங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலில் கூறப்பட்டிருந்ததாக சட்டத்தரணிகள் நழுவினர். அதனாலேயே வர்த்தமானி அறிவித்தல் நிறைவுறுவதற்கு ஒரு நாள் முன்னதாக அதன் மீது இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது நீதிமன்றம். ஆளும்தரப்புச் சட்டத்தரணிகளின் கூற்றில் தெரிந்த நம்பிக்கையின்மை அல்லது உறுதியற்ற தன்மையின் காரணமாகவே இந்த வழக்கில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அது சரியானது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு வெளியான வர்த்தமானி அறிவித்தலில் இது தொடர்பான அறிவிப்பு எதுவும் இடம்பெறவில்லை. ஆக மொத்தத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பை அடக்குவதற்கும், நீர்த்துப் போகச் செய்வதற்குமான பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதில் என்பிபி ஆளும்தரப்பு அதற்கு முந்தைய வேறு எந்தவொரு சிங்கள, பௌத்த பேரினவாத ஆட்சிகளுக்கும் சளைத்ததல்ல என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் மூன்று எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. நேற்று மேலும் இரு எலும்புக்கூடுகளும் மேலும் சில எலும்பு எச்சங்களும் அடையாளம் காணப்பட்டன.

செம்மணியின் முதல் கட்ட தோண்டும் பணியின்போது 19 எலும்புக்கூடுகள் முழுமையாக எடுக்கப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக வியாழக்கிழமை அடையாளம் காணப்பட்ட 3 எலும்புக்கூடுகளும் நேற்று வெளியே எடுக்கப்பட்டுப் பொதிசெய்யப்பட்டன. இதனால் தற்போது வரையில் மொத்தம் 22 எலும்புக்கூடுகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக, 45 நாட்களை நீதிமன்றம் ஒதுக்கியுள்ளது. அதில் 15 நாட்கள் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் நடைபெற்ற பின்னர் சில நாள்கள் ஓய்வின் பின்னர் மீண்டும் பணிகள் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்காமல் வேறு நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதில்லை. ஆனால் அநுரகுமாரவின் ஆளும்தரப்பு இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து கைச்சாத்திடுவதற்கு முன்னர் நாட்டுக்கு தெரிவிக்கவும் இல்லை. கைச்சாத்திட்ட பின்னரும் அதனைத் தெரிவிக்க மறுத்து வருகிறது.

கரம்போட் விநியோகித்த குற்றச்சாட்டுக்காக அண்மையில் நீதிமன்றம் 25 வருட சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அப்படியானால் இலங்கையின் இறையாண்மையை காட்டிக்கொடுத்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தளவு காலம் சிறைத்தண்டனை வழங்கப்படும்?

நாட்டு மக்களுக்குத் தெரிவிக்காமல் வெளிநாடொன்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தது மாத்திரமல்லாமல், அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருக்கும் விடயங்களை வெளிப்படுத்துமாறு கேட்டால், அதனையும் வழங்க முடியாது என தெரிவிப்பது பெரும் குற்றம். அதனால் இந்த விடயங்களை எப்போதாவது எங்களுக்கு நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல வேண்டி ஏற்படும்.

இந்தியாவுடன் இணைந்து ஆயுத உற்பத்திக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆளும்தரப்புக்குப் புதுமையான மன நிலையே இருக்கிறது. அத்துடன் இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருக்கும் விடயங்களை வெளிப்படுத்தாமல் இருப்பதால், அதில் ஏதாவது ஒரு விடயம் பாதகமானதாக இருந்தேயாகவேண்டும்.

ஆளும்தரப்பின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது, இதனை ஒரு முற்போக்கான ஆளும்தரப்பு என நான் ஒருபோதும் தெரிவிப்பதில்லை. ரணில் விக்ரமசிங்கவைவிட வலதுசாரி வெளிநாட்டுக்கொள்கை மற்றும் தொடர்புகளே இந்த ஆளும்தரப்பிடம் இருக்கிறது.

இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் நடத்தியபோது பல நாடுகள் இஸ்ரேலை கண்டித்து அறிக்கை வெளியிட்டிருந்தன. ஆனால் இந்த ஆளும்தரப்பினால் அவ்வாறான கண்டஅறிக்கை ஒன்றை வெளியிட முடியாமல் போயிருக்கிறது.

இறையாண்மையுள்ள நாடொன்றின் மீது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்வது தவறு என்றாவது தெரிவித்திருக்க முடியும். ஈரான் எப்போதும் எங்களுக்கு உதவி செய்யும் நாடு.

மேலும் இந்த நாட்களில் ஜெனிவா மனித உரிமை ஆணையாளர் எமது நாட்டுக்கு வந்து பலருடன் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார். எமது நாட்டில் போரின்போது இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவே கலந்துரையாடியுள்ளார்.

ஆணையாளர் ஆளும்தரப்பின் இருக்கும் பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஜேவிபியின் செயலாளர் ரில்வின் சில்வாவையும் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தார். ஆனால் காசாவில் உணவுக்காக வரிசையில் இருப்பவர்கள் மீது இஸ்ரேல் குண்டு தாக்குதல் நடத்துவதைக் காண்கிறோம். அங்கும் பெரும் இனப்படுகொலை இடம்பெற்று வருகிறது.

இது தொடர்பில் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு இஸ்ரேல் இராணுவத்துக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? நீங்கள் இறுதியாக காசாவுக்கு எப்போது சென்றீர்கள்? என ஆணையாளரிடம் இவர்கள் கேட்டிருக்கலாம்.

காசாவில் நாளாந்தம் பெருமளவி மனிதப் படுகொலைகள் இடம்பெறுவதை தொலைக்காட்சிகளில் காணும் நிலையில், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல், இலங்கையில் முடிவடைந்த போர் தொடர்பில் கதைத்து எமக்கு ஆலாசனை வழங்கிச்செல்லும்போது வாய்மூடி இருக்கும் அளவுக்கு பலவீனமான ஆளும்தரப்பா இந்த நாட்டில் இருக்கிறது என கேட்கிறேன் என்றார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தபோது அவரது வெளிநாட்டு பயணங்கள் குறித்து விசாரணை நடத்தப்படுவதாக குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்திற்குத் தெரிவித்ததாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து இந்தப் பதில் வந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணத்திற்கு நிதியளிக்க அரசு நிதியை தவறாகப் பயன்படுத்தினார் என்று செய்திகள் ஏற்கனவே வந்திருந்தன.

## ஸ்ரீலங்கன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க டாலர் நிதி இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

2. ஜனவரி 26, 2014 அன்று, மாலத்தீவிலிருந்து கொழும்பு வழியாக பிரான்சுக்கு பயணித்த 75 பயணிகள் ஷீஸி-563 விமானத்திலிருந்து அனுப்பப்பட்டனர். இந்த நடவடிக்கையால் 19,160 அமெரிக்க டாலர் இழப்பு ஏற்பட்டதாக ஆணையம் குற்றஞ்சாட்டுகிறது.

3. டிசெம்பர் 19, 2014 அன்று, முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவாக, கட்டுநாயக்க 18வது மைல் போஸ்ட் மைதானத்தில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக 1.25 மில்லியன் ரூபாய் அரச நிதியைப் பயன்படுத்தியிருக்கிறார்.

முன்னாள் முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்சவின் சகோதரரான விக்ரமசிங்க, விமான நிறுவனத்தில் நிதி கொள்முதல் மற்றும் தவறாகப் பயன்படுத்தப்பட்டது தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக கைது செய்யப்பட்டார்.

அவர் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ஜூலை 1 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## வெள்ளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் உதவிப் பொது முகாமையாளர் வைகுந்தன் உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, அவரது செயலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தும் திட்டத்துடனேயே வந்துள்ளோம். ஜூலை மாதம் இரு வாரங்கள் யாழ்ப்பாணத்தில் வெள்ளை ஈ யைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் 5 பிரதேச செயலர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக கொழும்பிலிருந்து 100 இயந்திரங்கள் (கூிஷ்ஆஜு ஸ்ரீலிழளஷ ழழிமிளஷ ஆற்ஜ) கொண்டு வரப்படும்.

அத்துடன் அதை இயக்குவதற்கான ஆட்களும் அழைத்து வரப்படவுள்ளனர். அவர்களுடன் நான் உட்பட உயர் அதிகாரிகளும் இங்கு வரவுள்ளோம்.

இரு வாரங்களும் இங்கு தங்கியிருந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம். யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இதனை முதல் கட்டமாகச் செயற்படுத்தவுள்ளோம் இதற்கான உதவிகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் தேவை - என்று தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான ஆளணி மற்றும் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட ஏனைய வசதிகளை வழங்குவதற்கும் ஆளுநர் இணங்கினார்.

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவுத்தூபியில் அவரின் மகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மேயர், பிரதி மேயர் ஆகியோர் சுடர் ஏற்றி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலியின் பின்னர் அங்கிருந்த செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்ததாவது:

'மாமனிதர்' ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு நீதி கோரி ஒவ்வொரு வருடமும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி போராட்டத்தை நடத்தி வருகின்றது.

ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையில் முக்கிய சந்தேகநபராகப் பிள்ளையான் நல்லாட்சிக்காலத்திலே கைதுசெய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

அந்த விடுதலை பல சர்ச்சைகளை உருவாக்கியிருந்தது. தென்னிலங்கையில்கூட நீதித்துறையில் பல்வேறு சந்தேகங்களை எழுப்பும் வகையில் அசாத் மௌலானாவின் வாக்குமூலம் இருந்தது. ஆனால், சட்டமா அதிபர் திணைக்களம் அந்த வலக்கைத் தள்ளுபடி செய்து குற்றவாளிக் கூண்டில் இருந்து பிள்ளையானை நீக்கியிருந்தார்கள்.

இப்போது காலம் மாறியிருக்கின்றது. அந்தப் படுகொலையைச் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் ராஜபக்ச - ரணில் விக்கிரமசிங்க அரசு தற்போது ஆட்சியில் இல்லை. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மீண்டும் பிள்ளையான் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

பிள்ளையான் கைதானது ஈஸ்டர் குண்டுத் தாக்குதலா அல்லது திரிபொலியுடன் இணைந்து மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படும் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் உட்பட ஏனைய கொலைகளைப் பற்றியா என்பதை நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆனாலும், ஜோசப் பரராஜசிங்கத்தின்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மாநகர சபையில் கூட்டம் முடிந்தபின் டிரிஎன்ஏ, என்பிபி உறுப்பினர்கள் குழப்பம்

நிலையியற் குழுக்களை நியமிப்பதில் உறுப்பினர்களுக்கு வேறுபட்ட கருத்து இருப்பதாகக்கூறி யாழ்ப்பாணம் மாநகர சபையின் கூட்டம் முடிந்த பின்னர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் (டிரிஎன்ஏ) தேசிய மக்கள் சக்தி (என்பிபி) உறுப்பினர்களுடன் சேர்ந்துகொண்டு குழப்பம் விளைவித்தனர். கூட்டம் நிறைவுற்றது என்று அறிவித்துவிட்டு யாழ். மாநகர முதல்வர் சபா மண்டபத்தைவிட்டு வெளியேறிய சமயம் அவர்கள் இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தினர்.

யாழ் மாநகர சபையின் முதலாவது அமர்வின் தொடர்ச்சியாக நேற்று விசேட அமர்வு இடம்பெற்றது. முதல் அமர்வில் நிலையியற் குழுக்களை நியமிப்பதில் இழுபறிகள் காணப்பட்டதன் காரணமாக அந்தப் பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் நேற்று விசேட கூட்டத்தைக் கூட்டி அந்தப் பணியை நிறைவு செய்ததும் முதல்வர் மதிவதனி கூட்டத்தை முடித்துக்கொண்டார்.

அவர் கூட்டத்தை முடித்துக்கொண்டு புறப்படும் வரை அமைதியாக இருந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் தர்சானந், முதல்வர் கூட்டத்தைத் தொடரவேண்டும் உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதிக்க வேண்டும் என்று முதல்வரைச் செல்லவிடாமல் மறித்துக் குழப்பம் விளைவித்தார். தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் அவருடன் சேர்ந்துகொண்டனர்.

கூட்டம் ஆரம்பமான நிலையில் கடந்த கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தால் ஒத்திவைக்கபட்ட சுகாதாரக் குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவு நடைபெற்றது.

அதன் பின்னர் மேலும் சில குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவு முடிந்தவுடன் கூட்டத்தை முடித்துக்கொள்வதாக முதல்வர் அறிவித்து சபையிலிருந்து வெளியேறினார்.

இது குறித்துப் பின்னர் கருத்துத் தெரிவித்த தர்சானந், சபையில் தனிப்பெரும்பான்மை இருப்பது போன்று முதல்வர் சபையைக் கொண்டு நடத்தப் பார்க்கின்றார், சிறுபான்மை ஆட்சியாளர்களாக இருந்துகொண்டு அப்படிச் செய்வதற்கு அனுமதிக்க முடியாது என்றார்.

இதேவேளை, மாநகர சபையின் முதலாவது கூட்டத்தில் தர்சானந் கொண்டுவந்த உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கவேண்டும் என்ற திட்டத்திற்கான தீர்மானத்தை சபை ஏகமனதாக நிறைவேற்றியிருந்தது. உள்ளூராட்சி சபை சட்டங்கள், நியதிகளின்படி உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளும்போது அவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கு அனுமதியில்லை. அது தெரிந்திருந்தும் தர்சானந் அப்படியொரு தீர்மானத்தை முன்மொழிந்தார். அதனை ஏனையவர்களும் ஆதரித்தனர். அந்தத் தீர்மானத்தை மாவட்ட உள்ளூராட்சி சபைகள் ஆணையாளருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

### வலி. தெற்கு பிரதேச சபை எல்லைக்குள்

# கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதியை நகர அபிவிருத்தி அதிகார சபை தரக்கூடாது

### முதல் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம்

நகர அபிவிருத்தி அதிகார சபையினர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் கட்டட அனுமதியினை வழங்கக்கூடாது எனவும், அதற்குரிய அனுமதிகளை பிரதேச சபையே வழங்கும் எனவும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் மேலும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அத்தோடு, தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் பிரதேச சபையின் அனுமதியினைக் கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ள அமரர் தர்மலிங்கம் மற்றும் நாகலிங்கம் ஆகியோரின் நினைவு தினங்களை பிரதேசசபையே நடத்தும் எனவும் வேறு எந்த அமைப்புக்களும் அதனை நடத்துவதற்கு அனுமதிக்க முடியாது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தோடு மக்களின் நன்மை கருதி வியாபார அனுமதிப்பத்திரத்தை ஒரு நாள் சேவையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றிய ஆளும்தரப்பு

**வடக்கு மாகாணத்தில் சுமார் 5,941 ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கும்வகையில்வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பான அரசுத் தலைவர் அநுரகுமாரவின் தலைமையிலான ஆளும்தரப்பின் வாக்குறுதி, இன்னும் ஒருமுறை தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பிறகு, தமிழ் மக்கள் பெரும் எதிர்ப்புக்களைக் காட்டி தங்கள் உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள முயன்றனர். அதேசமயம் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரான அரசுத் தலைவர் சட்டத்தரணி சுமந்திரனால் இதற்கெதிராக சட்டரீதியான எதிர்ப்பும் காட்டப்பட்டது. அவர் தாக்கல் செய்த வழக்கில் நாட்டின் உயர் நீதிமன்றம் இந்த வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை விதித்து,**

**இந்தத் தடை உத்தரவிற்கு முன்பாக 'அரசே இதனை மீளப்பெற ஏற்பாடுகள் செய்யும்' என ஆளும்தரப்பு கூறியதை நாங்கள் மறக்கவில்லை.**

**இந்த வர்த்தமானி அறிவித்தல் சட்ட ரீதியாக அமுலாகும் மூன்று மாதக் காலக்கெடு இன்று (ஜூன் 28) முடிவடைந்துவிட்டது. ஆனால், அதனை அதிகாரபூர்வமாக மீளப்பெறும் நடவடிக்கையை ஆளும்தரப்பினர் மேற்கொள்ளாமை, மிகப்பெரிய அரசியல் வஞ்சகமாகவே கருதப்படுகின்றது. வாக்குறுதிகளை வழங்கி மக்களை நம்ப வைத்து, பின்னர் அதனை செயல்படுத்தாமை என்பது பழைய அரசியல் கபடத்தனத்தின் தொடர்ச்சியே.**

**அநுரகுமார தலைமையிலான ஆட்சியின் தொடக்கத்தில், ஜனநாயக நீதிக்குரிய அரசியல் மாற்றத்தின் மீதான நம்பிக்கை தமிழர்கள் மத்தியில் உருவாகியிருந்தது.'புதிய பாதை, புதிய ஆரம்பம்' என்ற உரைகளில், முந்தைய ஆட்சி காலங்களில் செய்யப்படாத காரியங்களை மேற்கொள்வோம் என உறுதியளித்த இவர்களே, இப்போது அதே பழைய போக்கில், தமிழர்களை ஏமாற்றுவதற்கான அரசியல்வகைகளையே தேர்ந்தெடுத்துள்ளனர். இது இலங்கையின் சாபக்கேடு.**

**இது வெறும் சட்டப்பூர்வ நடவடிக்கையல்ல; இது பெரும் நம்பிக்கையை துரோகம். ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள், சர்வதேச அழுத்தங்கள், மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களின் வேண்டுகோள்கள் அனைத்தும் இருந்தும், அந்த வர்த்தமானி அறிவித்தலை பின்வாங்கும் எந்தவொரு முயற்சியும் இல்லை என்பதே உண்மை.**

**ஒரு முறை தவறு நடந்தால், தவறாகக் கருதலாம். ஆனால் மீண்டும் மீண்டும் தமிழ் மக்களுக்கு கொடுக்கப்படும் வாக்குறுதிகளை ஆளும்தரப்பினர் ஏமாற்றுவது, சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் பாரம்பரியத்தின் தொடர்ச்சியே என்பதை நிரூபிக்கின்றது. ஆட்சிகள் மாறினாலும், மனப்பான்மை மாறாத நிலை, இந்த நாட்டின் நிலைத்தன்மையற்ற மற்றும் இருமுக அரசியலின் சாட்சியாகும்.**

**தமிழ் மக்களிடம் காணிகளை அபகரிப்பது என்பது, அவர்களின் வாழ்வாதாரத்தையே அழிப்பதற்கான அரசியல் நோக்கமென்றே கூறவேண்டும். பசுமை நிலங்கள், குடும்ப பாரம்பரியங்கள், உணவுத் தன்னிறைவு, மற்றும் உரிமையின் அடையாளமான நிலங்களை அரசுடமையாக்கும் முயற்சி, மிகப்பெரும் சமூக வன்முறையை உருவாக்கும் விதமாகவே அமைகின்றது.**

**இந்த நிலையில், தானே தெரிவித்த வாக்குறுதிகளை ஆளும்தரப்பு மீறுவதும், சட்டத்தையும், நீதியையும், மக்கள் நம்பிக்கையையும் புறக்கணிப்பதற்கான சட்டவிரோத போக்காகும். இது ஆளும்தரப்பின் உரிய நெறிப்பழக்கத்தையே கேள்விக்குள்ளாக்குகின்றது.**

**நாட்டில் இனங்களுக்கிடையிலான சமாதானம் மற்றும் ஒற்றுமை என்பது வெறும் மேடை உரைகளால் உருவாகாது. செயலில் காட்டப்படும் நீதிமுறைகளால் மட்டுமே அது உருவாகும். ஆனால் தற்போதைய அரசியல் சூழ்நிலை, தமிழர்களுக்கு எதிரான பாரபட்சமான நிலைப்பாட்டையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.**

**இதன் விளைவாக, தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டனர். நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எழுந்த புதிய அரசியல் மாற்றத்தின் கனவுகள் மீண்டும் சிதைந்தன. அரசுத் தலைவர் பதவியில் இருப்பவர்வரை, ஆட்சியில் செயலில் இருப்பவர்களின் செயல்கள் மக்கள் நம்பிக்கைக்கு ஏற்ப அமையவேண்டும். இல்லையெனில், இந்த அரசு கடந்த ஆட்சிகளைவிட சிறந்தது எனக் கூறும் உரிமையையே இழக்க நேரிடும்.**

**எனவே, இந்த வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக பின்வாங்க வேண்டிய கடமையிலிருந்து ஆளும்தரப்பு பின்வாங்க முடியாது. இது அவர்களின் சட்டப்பூர்வ, ஜனநாயகப்பூர்வ, மற்றும் இனநீதி சார்ந்த கட்டாயமே. இது நிறைவேறாவிட்டால், இனவேறுபாட்டுக்கான தூண்டலாகவே இந்த செயல் முடியும் என்பதையும் அவர்கள் உணரவேண்டும்.**

**நாடெங்கும்மக்களின்உரிமைகளைமதிக்காதஆட்சிநிலைத்திருக்க முடியாது. தமிழ் மக்களை வாக்குறுதிகளால் மீண்டும் மீண்டும் ஏமாற்றும் அரசியல் தீர வேண்டிய நேரம் இது.**

# 'அணையா விளக்கு' போராட்டத்தில் குழப்பம்; மறைமுக நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருந்தது

## அதனால் கடும் நெருக்கடி என ஏற்பாட்டாளர்கள் தெரிவிப்பு

தங்களுக்குள் ஜனநாயகத் தன்மையைப் பேணமுடியாத அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் – அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் தாம்சார்ந்த அரசியல் பின்புலங்களின்இருப்பைமுதன்மைப்படுத்தும்நோக்கில் அடிப்படை மனித அறத்திற்கு மாறாக நடந்துகொண்ட முறையானது போராட்டத்தின்செல்வழியைமடைமாற்றி, அதன் வல்லமையை குன்றச்செய்யும் மறைமுக நிகழ்ச்சிநிரலைக் கொண்டிருந்தமை இப்போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியது என்று 'அணையா விளக்கு' போராட்டத்தினை ஏற்பாடு செய்த மக்கள் செயல் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செம்மணி மனிதப் புதைக்குழிக்கு சர்வதேச நீதி வேண்டியும், தமிழ் சமூகத்திடையே விழிப்பை ஏற்படுத்தவுமாக மக்கள் செயல் தன்னார்வ அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டு, கடந்த 23,24,25 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட 'அணையா விளக்கு' போராட்டம் எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிக தாக்கம் செலுத்துகையை ஏற்படுத்தியிருக்கிறது.

இப்போராட்டத்தினை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு எம்மோடு துணைநின்ற, வடக்கு கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், மும்மதங்களின் தலைவர்கள், யாழ்ப்பாண மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் சிவில் சமூக அமையத்தினர், தமிழ் அரசியல் கட்சிகள், ஊடகவியலாளர்கள், ஊடக அமைப்புகள், வலையொளியாளர்கள், புலம்பெயர்தமிழ்அமைப்புகள், அரசசார்பற்ற தன்னார்வ அமைப்புகள், குடிநீர், உணவு, சிற்றுண்டிகளை வழங்கிய அனுசரணையாளர்கள், அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், வலிகாமம் கிழக்கு மற்றும், நல்லூர் பிரதேச சபையினர், யாழ்ப்பாண மாநகர சபையினர், போராட்டத்திற்குத் தேவைப்பட்ட பொருளுதவிகள் புரிந்த கொடையாளர்கள், எரிபொருள் நன்கொடையாளர்கள், கொட்டகை மற்றும் ஒளி ஒலி வசதிகளைச் செய்துதவியவர்கள், சமூக வலைத்தளங்களில் போராட்டம் குறித்த பதிவுகளைப் பகிர்ந்து பரவலடையச் செய்தவர்கள், இறுதிநேரத்தில் மனிதச் சங்கிலியாக நின்ற நண்பர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட அனைவருக்கும் மக்கள் செயலின் சார்பில் சிரம்தாழ்த்திய நன்றிகள். நீங்கள் புரிந்தவைகள், காலத்தினால் செய்த, ஞாலத்திலும் மானப் பெரிய உதவி .

தமிழர்தாயகத்தில், வலிந்துகாணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் விடயத்திலும் சர்வதேசத்தின் கவனத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்கும் முகமாக நிகழ்த்தப்பட்ட இப்போராட்டத்தின் இறுதிநாளில் முகம்சுழிக்கவைக்கும் சில துர்நிகழ்வுகள் இடம்பெற்றுவிட்டன. தங்களுக்குள் ஜனநாயகத் தன்மையைப் பேணமுடியாத அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் – அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் தாம்சார்ந்த அரசியல் பின்புலங்களின் இருப்பை முதன்மைப்படுத்தும் நோக்கில் அடிப்படை மனித அறத்திற்கு மாறாக நடந்துகொண்ட முறையானது போராட்டத்தின் செல்வழியை மடைமாற்றி, அதன் வல்லமையை குன்றச்செய்யும் மறைமுக நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருந்தமை இப் போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியது. களத்திற்கு வெளியிலிருந்த பார்வையாளர்களுக்கு, ஏற்பாட்டாளர்கள் தொடர்பில் கேள்விகளையும் ஏற்படுத்தியது. இத்தகைய பின்னணியில் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் எனும் வகையில் எதிர்பாராததும், திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டதுமான இவ்அநாகரிகசெயற்பாடுகளினால் அசௌகரியங்களிற்கும், கௌரவக்குறைவிற்கும் உள்ளான வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுவினர்களிடமும், பொதுமக்களிடமும், அரசியற் பிரமுகர்களிடமும்எமதுஉளப்பூர்வமானவருத்தங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில், அவர்தம் குடும்ப உறுப்பினர்கள் கடந்துவந்த நீண்ட நெடிய, அலைச்சலும் கண்ணீரும் நிறைந்த, கொடிய பயணத்தின் வலிகளது கனதியையும், அவர்களின் போராட்ட நியாயப்பாடுகளையும் அறியாத, ஊடக அறமற்ற சில வலையொளியாளர்கள், தமது காணொளிகளிற்கான பார்வை எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில், பரபரப்பு அல்லது ஒரு குழப்ப நிலையை வலிந்து ஏற்படுத்துவதற்கு ஏதுவான புறச்சூழலை உருவாக்குவதற்குரிய செயற்பாடுகளில் ஈடுபட்டமை அருவருக்கத்தக்க விடயமாக அமைந்தது. எதிர்வரும் காலங்களில் போராட்டங்களைத் திட்டமிடும் தரப்புக்கள் இத்தகைய போலி ஊடகர்களைக் கையாள்வதற்கான விசேட பொறிமுறைகளில் கவனம்செலுத்த வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றது.

இத்தகைய நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும், போராட்டநிகழ்விடத்திலிருந்து பகிரப்பட்ட காணொளிகள் மற்றும் நேரடிக் காணொளிகள் போராட்டச் சூழலின் உண்மை நிலவரத்தினை மக்களுக்கு விளக்கியது. இந்நிலையில், எத்தகைய கட்சிசார் – அமைப்புக்கள்சார் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கும் உட்படாது, வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர் மற்றும்செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் விடயத்தில் நீதி கோருவது மட்டுமே இப்போராட்டத்தின் உள்ளார்ந்த நோக்கம் என்பதும், இக்கோரிக்கையின் பின்னுள்ள அறமும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்வோல்கர் டர்க் (஽லியிவளஷ வீற்ஷவ) யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் இக்கால கட்டத்தில் இப்போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவமும், புரிந்துகொள்ளப்பட்டது. இதன்விளைவாக நிகழ்விடத்தில் மக்கள் குழுமத் தொடங்கியதுடன் இப்போராட்டம் இன்னொரு பரிமாணத்தினை அடைந்தது. அணையா விளக்கு அனைவரது மனங்களிலும் பற்றிக்கொண்டது. மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் அணையாவிளக்கின்ஒளிக்கீற்றுக்கள்பிரகாசித்தமையை அறிந்திருப்பீர்கள். காலதேவை கருதி சட்டென இதனை ஏற்பாடுசெய்த அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தருகிறோம். இப்படியாக அணையா விளக்கென்பது வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும், செம்மணி மனிதப்புதைகுழி விடயத்திலும் சூழ்ந்திருக்கின்ற இருளை நீக்கவேண்டிய அவசியத்தை உலகறியச்செய்திருக்கின்றது.

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்தினைப் பார்வையிட்டுத் திரும்புவதனையே அதுவரை தனது நிகழ்ச்சிநிரலாகக்கொண்டிருந்தஜ.நாமனிதஉரிமைகள் பேரவையின் ஆணையாளரின் நிகழ்ச்சி நிரலை மாற்றி போராட்டம் இடம்பெற்ற களத்திற்கு அவரை வரவைத்தது, இப் போராட்டத்திற்கு அழைப்புவிடுத்த ஏற்பாட்டாளர்களின் தீவிர முயற்சி என்பதற்கும் அப்பால் இப்போராட்டத்தில்ஈடுபட்ட மக்களின்நீண்டகாத்திருப்பும், இவ் மனிதப்புதைகுழிகளில் புதையுண்டுபோன மக்களின் ஆத்ம பலமுமேயாகும். அந்த ஆத்மாக்கள் புதையுண்டும் பேசிக்கொண்டிருக்கின்றன. நிலம் பிளந்து நீதி கோருகின்றன.

போராட்ட நிகழ்விடத்திற்கு வருகைதந்த ஜ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர், அங்கு ஏற்றப்பட்டு மூன்று நாட்களாக எரிந்து கொண்டிருந்த அணையா விளக்கினை மும்முறை வணங்கி, புதைக்கப்பட்டோரை நினைவுகூர்ந்து மலர்தூவி அஞ்சலி செலுத்தியமை போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் வலியை, அவர்களின் கோரிக்கைகளை ஒத்துணர்வுடன் அணுகியமையையே காட்டுகின்றது. தன்னெழுச்சியான மக்கள் போராட்டத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே இதனைக் கொள்ள முடிகின்றது. அவர் போராட்டக்காரர்களின் ஆறு அம்சக் கோரிக்கைகள்அடங்கியசெப்புப்பட்டயத்தினைப்பெற்றுக் கொண்டதுடன்அல்லதுஅவர்வணக்கம்செலுத்தியதுடன் இம் மக்களிற்கான நீதி கிடைத்துவிட்டது என்பது பொருளல்ல. மாறாக, சர்வதேச நாடுகளை உள்ளடக்கிய அமைப்பொன்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் அவ்வமைப்பில் முக்கிய பதவியில் இருக்கும் தனிநபர் ஒருவரின் மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டியுளோம் என்பதும், நீண்ட பயணத்திற்கான முதலடியை மக்கள் தன்னெழுச்சியாக எடுத்துவைத்துள்ளனர் என்பதுமே இப்போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். உலகின் மொத்தமனச்சாட்சியையும்தட்டிப்பார்த்தோம். அரசுடைய தரப்புக்களது நலன்சார்ந்த அரசியலுறவுகளுக்கு முன்னால் எமது நியாயமான நீதி கோரிக்கைகள் அடிபட்டுப்போகின்றன என்பதே அனுபவமாகக் கிடக்கிறது. எனவே எமக்கான நீதியை உலக மாந்தர்கள் ஒவ்வொருவரின் மனச்சாட்சியையும் தொட்டுத் தட்டிக் கேட்கிறோம். பல தலைமுறைகள் கடந்தாவது நாம் கோரும் நீதியின் கதவுகள் திறக்கும் என நம்புகின்றோம்.

கடந்த பதினைந்தாண்டுகளுக்குள் தமிழ் மக்களின் அரசியலுரிமைகளையும், நீதி சார்ந்த கோரிக்கைகளையும் முன்வைத்துப் பல்வேறு கட்டங்களில் மக்கள் திரட்சிப் போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மக்கள்திரள்வதும், கலைவதும்ஏற்ற இறக்கமாகக் காலக்கணக்கில் வரையப்பட்டிருக்கிறது. அண்மைக்காலமாக அந்த வரைபின் கோலம் தொடர்ச்சியாக இறங்குமுகம் காட்டிவருவதையும் அவதானிக்கமுடிகிறது. இந்த இறங்குமுகம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அசைத்துப் பார்க்கவல்லது. எனவே தான் அணையா விளக்கு போராட்டம் மாதிரியான மக்கள்மயப்பட்ட போராட்டங்கள் இன்றைய சூழலுக்கு அவசியப்படுகின்றன. இந்த அவசியத்தை உணர்ந்து கடந்த 23,24,25 ஆம் திகதிகளில்செம்மணியில்திரண்ட அத்தனைபேருக்கும் உளமார்ந்த நன்றிகள் – என்றுள்ளது.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலை வழக்கை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள்எடுத்திருக்கின்றோம். இதுதொடர்பான விடயங்கள் சில மாதங்களுக்கு முன்னர் ஜோசப்பரராஜசிங்கத்தினின்குடும்பத்தினின் இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசாரணைகள்மீண்டும்ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்திருக்கின்றார். இங்கு மூடிமறைக்கப்பட்ட, நீதி மறுக்கப்பட்ட பல படுகொலைகளை விசாரணை செய்யவேண்டும். இரு தினங்களுக்கு முன்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வந்தபோது அவர் எங்களிடம் சில விடயங்களைத் தெரிவித்திருந்தார்

அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர்கள், படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பத்து விடயங்களை முன்வைக்குமாறு கூறியிருந்தார். இதன்போது நாங்கள் முதலாவதாக ஜோசப் பரராஜசிங்கத்தின் விசாரணையை மீள ஆரம்பிக்க வேண்டும், ரவிராஜ் படுகொலை, திருகோணமலை மாணவர்களின் படுகொலைகள், மாணவர்கள் கடத்தப்பட்டமை, இறுதிப் போர்க் காலப் பகுதியில் நேரடியாக கையளிக்கப்பட்டுக் காணாமல்போனவர்கள், கொல்லப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் தொடர்பில் தெரிவித்திருந்தேன். இதேபோன்று அனந்தி சசிதரனின் கணவரின் வழக்கு போன்ற பல்வேறு விடயங்களைத் தெரிவித்திருந்தேன். நாங்கள் நீதிக்கான போராட்டத்தைக் கைவிடமாட்டோம்.

ஜோசப்பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரையில் நீதி கோரிய போராட்டத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னெடுக்கும் என்பதை அவரின் மகனுக்கு நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம் - - என்றார்.

## ஜெய்கா,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்மயமாக்கியது என்றும் கூறினார்.

'இப்படிச் செய்யப்படக்கூடாது. அவர்கள் எங்களுடன் இப்படி வேலை செய்ய முடியாது. அவர்கள் பொதுவில் சொல்வதற்குப் பதிலாக இதை இன்னும் ராஜதந்திர ரீதியாகக் கையாண்டிருக்கவேண்டும்,' என்று அமைச்சர் ஒரு தொலைக்காட்சி நேர்காணலின் போது கூறினார்.

இலங்கையின் மின்சாரச்சட்டம் 2024இல் செய்யப்பட்ட சில திருத்தங்களைக் குறித்த தமது கவலைகளை வெளிப்படுத்தி, மூன்று அமைப்புகளும் எழுதிய கூட்டுக் கடிதத்தைக் குறிப்பிட்டே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மின்சார நிறுவனங்களின் நிரந்தர அரசு உரிமை, தேசிய பரிமாற்ற வலையமைப்பு சேவை வழங்குநரை (ஹிவீஹிறீஊண) மறுசீரமைத்தல் மற்றும் கட்டணங்களை ஒழுங்குபடுத்துபவர் மேற்பார்வை செய்தல் ஆகியவை சுட்டிக்காட்டப்பட்ட கவலைகளில் அடங்கும் - இவை நிர்வாகம், நிதி நிலைத்தன்மை மற்றும் எரிசக்தித் துறையில் தனியார் முதலீட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று எச்சரிக்கின்றன.

## வோல்கர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயராணையரின் வருகை மற்றும் அவரது யாழ்ப்பாணப் பயணமானது, ஆளும்தரப்பு ஐ.நாவின் தேவைக்கேற்ப செயற்படுகின்றது என்பதை உணர்த்தியுள்ளது.

இந்த ஆளும்தரப்பு ஆட்சியமைப்பதற்கு பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்கள் பெரும் உதவி, ஒத்துழைப்புக்களை வழங்கின.

30 ஆண்டு கால போரின் நிறைவில் படையினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு பலரும் முயற்சித்தனர். குறிப்பாக புலம்பெயர் தமிழர்களின் தேவைக்காகவே இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் தற்போது ஆளும்தரப்பினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கானவையா என்ற சந்தேகமும் எழுகிறது.

மனித உரிமைகள் உயராணையரிடம் ஒரு விடயத்தைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். நீங்கள் இலங்கைக்குப் பயண் செய்வதோ, யாழ்ப்பாணத்துக்கு செல்வதோ பிரச்சினையல்ல. ஆனால் உங்களதுதேவைகளைநிறைவேற்றுவதற்காக இந்த ஆளும்தரப்பைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தால் அதற்கு நாம் தயாராக இல்லை.

இலங்கையர்கள் என்ற ரீதியில் இந்த நாட்டில் படையினர் அமைதியையும், ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதற்காகவே போராடினர் என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம். எனவே அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவைகளுக்காக நாட்டை ஆட்டிவைப்பதற்கு இலங்கை ஐ.நா.வின் கைப்பாவை இல்லை என்பதை உயராணையர் வோல்க்கருக்கு நினைவுபடுத்துகின்றோம் என்றார்.

## பேருந்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கப்படாவிட்டால், தெமட்டகொடையைச் சேர்ந்த குற்றம் சாட்டப்பட்டவர் மேலும் ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கவும் உத்தரவிடப்பட்டது.

கடந்த ஆண்டு நடந்த இந்த சம்பவம் நீண்ட சட்ட நடைமுறைக்கு வழிவகுத்தது.

# சிறுமியைத் துஸ்பிரயோகம் செய்த முதியவருக்கு 60 ஆண்டுகள் சிறை

அடுத்த வீட்டில் வசிக்கும் முன்பள்ளிச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட 68 வயதுடைய ஒருவருக்கு 60 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சபுவிடா பிறப்பித்த தண்டனையில், ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையை தொடர்ச்சியாக அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

குற்றவாளிக்கு ரூ. 30,000 அபராதமும் விதிக்கப்பட்டது, பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 1 மில்லியன் இழப்பீடும் வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது, பணம் செலுத்தத் தவறினால் கூடுதலாக இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரித்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் இரண்டு மாதங்களுக்கும் மேலாகப் பல சந்தர்ப்பங்களில் சிறுமியைத் தனது வீட்டிற்குள் இழுத்துச் சென்று துஸ்பிரயோகம் செய்துள்ளார் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் நிரூபித்தனர். சிறுமியின் பெற்றோர் வீட்டை விட்டு வெளியே இருந்த நேரங்களைப் பயன்படுத்திக்கொண்டார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட விசாரணைக்குப் பிறகு, வழக்குத் தொடுநரான சட்டமா அதிபர் திணைக்களம் குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதாக நீதிபதி தீர்ப்பளித்தார். குற்றங்கள் நடந்தபோது 55 வயதானவராக இருந்த குற்றம் சாட்டப்பட்டவர், பாதிக்கப்பட்டவரின் நெருங்கிய உறவினர் மற்றும் இரண்டு மகள்களின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேபோன்ற துன்புறுத்தல் செயல்களில் ஈடுபடக்கூடிய மற்றவர்களைத் தடுக்கும் வகையில் தண்டனை வழங்குமாறு காவல்துறை நீதிமன்றத்திடம் கோரியிருந்தது.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2025இல் வெளியிடப்பெற்றது